# பாரதியின் சமூக விடுதலை

**த. ஸ். ஸாம்தாஸ்**
முனைவர் பட்ட ஆய்வாளர், ஸ்காட் கிறித்தவக் கல்லூரி, நாகர்கோவில் &
மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழகம், திருநெல்வேலி

மலர்: 4

இதழ்: 2

மாதம்: அக்டோபர்

வருடம்: 2019

ISSN: 2454-3993

## முன்னுரை

பாட்டுக்கொரு புலவன் பாரதி என்று கவிமணி தேசிய விநாயகம் பிள்ளை பாரதியாரின் சிறப்பினைக் கூறியுள்ளார். பாரதியார் இருபதாம் நூற்றாண்டின் விடிவெள்ளியாக, கவிஞர்களில் புதுமைக் கவிஞராக விளங்கினார். பாரதியார் மனித குலத்தின் ஒருமைப்பாட்டில் நம்பிக்கை கொண்டவராதலால், சமுதாயத்தின் மக்கள் ஒருமைப்பாட்டிற்காகத் தம் பாடல்கள் மூலம் குரல் எழுப்பினார். சமுதாயம் என்பது பல இன, மொழி, சமயம், சாதி போன்ற பிரிவுகளின் அடிப்படையில் கூடிவாழும் அமைப்பாகும். இப்பிரிவு மக்களிடையே எவ்வித வேறுபாடும் இல்லாமல், ஒற்றுமையுடன் வாழ வேண்டும் என்பதையே பாரதியார் மிகவும் விரும்பினார். பாரதியார் தமிழுக்கும், தமிழகத்திற்கும் தனிப் பெருமையினைச் சேர்த்தவர் ஆவார். பாரதியார் எடுத்துரைத்த பெண்ணுரிமை, சாதிப்பாகுபாடு போன்ற கருத்துக்களை முறையே காணலாம்.

## சமுதாய விடுதலை

பாரதியார் பாரத மக்கள் அடைய வேண்டிய விடுதலைகளில் சமுதாய விடுதலையும் ஒன்றாகுமெனக் கொண்டு அதற்கு முக்கிய இடம் கொடுத்தார். தேச விடுதலை பெறுவதற்குச் சமுதாயம் தடையாக இருப்பாகச் சுட்டிக்காட்டினார். இவை அன்றி, சாதிப் பிரிவினைகளையும், அவற்றை அகற்றுவதற்கான வழிமுறைகளையும் மக்களுக்குச் சுட்டிக்காட்டினார்.

முற்காலந்தொட்டு சமுதாயத்தில் நிலவிவந்த சாதிப் பிரிவினையைக் கண்டு பாரதியார் அதைச் சமுதாயத்திலிருந்து அகற்ற வேண்டும் என்று எண்ணினார். சாதிப் பிரிவுகளைப் பாரதியார் எதிர்க்கவில்லை. ஆனால் சாதிக் கொடுமையை அவர் எதிர்த்தார். பிளவுப்பட்ட சமுதாய அமைப்பைக் காட்டும் பாரதியார் அவற்றில் சமத்துவம் நிலவ வேண்டும் என்று பல இடங்களில் கூறியதை உணரலாம்.

பாரதியார் தான் பார்ப்பனக் குலத்தில் தோன்றியிருப்பினும் அக்குலத்தில் காணப்படும் குறைகளை வெளிப்படையாகக் கூறுவதோடு வன்மையாக அவைகளைக் கண்டித்தார். பாரதியாரைப் போல் சாதிநெறியை ஒழிக்கத் துணிந்து நின்றவர் உலகில் எவரும் இல்லை என்று உணரலாம்.

***பார்ப்பானை ஐயரென்ற காலமும் போச்சே - வெள்ளைப் பரங்கியரைத் துரையென்ற காலமும் போச்சே***

***(பாரதியார் கவிதைகள், தேசிய கீதங்கள், பா.31)***

என்று மிகுந்த துணிச்சலுடன் சொன்னவர் பாரதியார் ஆவார். பாரதியார் மதப் பிரிவுகளைக் கடந்து மண்ணில் பிறந்தவர்கள் அனைவரையும் ஒன்றாகப் பார்த்த உத்தமர் ஆவார். வெள்ளை நிறங்கொண்ட தாய்ப்பூனை நான்கு குட்டிகள் ஈன்றபோது ஒவ்வொன்றும் ஒவ்வொரு நிறத்தில் காணப்பட்டன. ஒரு குடும்பத்தில் ஒரு பெற்றோருக்குப் பிறந்த குழந்தைகள் இரத்த வேறுபாடு உடையவர்களாய் இருந்தும் உருவத்தாலும், நிறத்தாலும், உடலாலும் மாறுபட்டுக் காணப்படும்போது மக்கட் குலத்தைச் சாதியால் வேறுபடுத்துவது தவறு என்றும் தன் பாடலில் குறிப்பிட்டடுள்ளார். களங்கமற்ற பிஞ்சு உள்ளங்களில் சாதி, குலம் என்னும் நச்சுப்புகா வண்ணம் நிறத்தாலும், உருவத்தாலும் நாம் அனைவரும் ஒன்றே என்னும் கொள்கையை உணர்த்து வதற்காகவே முரசுப்பாட்டில் நால்வருண பாகுபாட்டைக் கூறி வேறுபாடு காட்டுதல் கூடாது என்று எடுத்துரைத்துள்ளார்.

பாரதியார் தேச விடுதலையை முழு மூச்சாகக் கொண்டவராவார். ஆயினும், அத்தேச விடுதலைக்கு இடையூறாக இருந்த சமுதாய சீர்கேடுகளை வெறுத்து ஒதுக்க பாரதி தயங்கவில்லை.

***ஜாதி மதங்களைப் பாரோம் - உயர்***
***ஜன்மமித் தேசத்தி லெய்தின் ராயின்***
***வேதிய ராயினு மொன்றே - அன்றி***
***வேறு குலத்தின ராயினு மொன்றே***

***(பாரதியார் கவிதைகள், தேசிய கீதங்கள், பா.1)***

என்ற பாடலில் சாதி வேறுபாடற்ற சமுதாயத்தை உருவாக்க வேண்டும் என்னும் சிந்தனையை வெளிப் படுத்தியுள்ளதை அறியலாம்.

சமுதாயத்திலிருந்து சாதி முறை முற்றிலும் அகல வேண்டுமென்று விரும்பிய பாரதியார், அதற்கான தீர்வு முறைகள் சிலவற்றையும் குறித்துள்ளார். நமது தேசம் முன்பிருந்த நிலைக்கு வர வேண்டுமானால் உண்மையான சாதி வகுப்புகள் ஏற்பட வேண்டும். பொய் வகுப்புகளும், போலிப் பெருமைகளும் உடைதெறியப்பட வேண்டும். இது நம்முடைய வேத தத்துவத்தின் கருத்து என்று பல இடங்களில் பாரதியார் கூறுவதனை அறியலாம். சாதி வேறுபாடுகளை அகற்றுவதற்குப் பாரதியார் தமிழ்நாட்டுச் சான்றோர்கள் தமக்கு முன்னர் கூறியுள்ள கருத்துக்களை ஏற்றுக்கொண்டு போற்றியுள்ளார். இன வேறுபாடற்ற சமுதாயத்தைப் படைப்பதற்குப் பாரதியார் தமது கவிதைகளை முக்கிய குறிக்கோளாகக் கொண்டிருந்தார்.

## பொருளாதார விடுதலை

உலக வாழ்க்கையை இயக்கி வருவது பொருட் செல்வமாகும். பொருளாதார ஏற்றத்தாழ்வுகள், வாழ்வின் அமைதியைக் குலைக்கின்றன. வறுமையில் வாடித் தவிப்போர், செல்வத்தில் மகிழ்ந்து திளைப்போர் ஆகிய இருவகை மாந்தர்கள் இந்திய சமுதாயத்தில் காணப்படுகின்றனர். இந்தியா விடுதலை பெறுவதற்கு முன்பே, பொருளாதார ஏற்றத்தாழ்வுகள் குறித்து பாரதி சிந்தனை செய்துள்ளார் என்பது வெள்ளிடை மலையாகும்.

பாரதியாருக்கு வறுமையின் சுவடுகள் ஆரம்பகாலம் முதலே இருந்தது. பாரதியார்

வாழ்வின் தொடக்கம் முதல் இறுதிவரை, வறுமைத் துயரால் வாடி நொந்தவர் ஆவார். வறுமை கொடியது. அதிலும் இளமைக்கால வறுமை மிகக் கொடியதாகும். பாரதியார் அந்தக் கொடிய வறுமையைப் பற்றி,

**வையமீதில் வறுமை ஓர் கொடுமை அன்றோ?**

***(பாரதியார் கவிதைகள், தேசிய கீதங்கள், பா.36)***

என்று பாடினார். பொதுவுடைமைச் சமுதாயத்தை உலகில் உருவாக்குவதன்மூலம், வறுமையை உலகிலிருந்து ஒழிக்கப் பாடுபடுவேன் என வஞ்சினம் கூறுபவராகப் பாரதியார் காணப்படுகிறார்.

நாட்டின் வறுமையை எண்ணிப்பார்த்த பாரதியார், வறுமைத் துன்பத்தில் உழன்ற மக்களை, சமுதாய உணர்வுடன் உற்றுநோக்கியுள்ளார். பொருளாதார மேம்பாட்டுக்கு அடிப்படைக் காரணமாக அமைந்துள்ள தொழில்களை இரண்டு வகையாக்கி, உழவுத்தொழில் என்றும், பிற தொழில்கள் என்றும் உரைத்து இருக்கின்றார்.

**உழவுக்கும் தொழிலுக்கும் வந்தனை செய்வோம் - வீணில்**
**உண்டுகளித் திருப்போரை நிந்தனை செய்வோம்**
**விழலுக்கு நீர்பாய்ச்சி மாய மாட்டோம் - வெறும்**
**வீணருக்கு உழைத்துடலம் ஓயமாட்டோம்**

***(பாரதியார் கவிதைகள், தேசிய கீதங்கள், பா.37)***

என்று பாரதியார் தமது கவிதைகளில் குறிப்பிட்டுள்ளார். மேலும், பிறரின் வாழ்க்கையை மேன்மையாக்கவதற்காகத் தம்மை சோர்வாக்கும் இத்தொழிலாளிகள் தன்னலமற்ற ஞானிகள் ஆவார்கள். இவர்களே இந்த பாரத நாட்டின் உண் மையான குடிமக்களாவார் என்று பாரதியார் கூறுவதை அறியலாம்.

### சமயம் பற்றி பாரதி

பாரதம் பல்வேறு சமயங்களின் உறைவிடம் ஆகும். இந்நாட்டில் தோன்றிய சமயங்களும் உண்டு. வெளிநாடுகளில் தோன்றி இங்கு நிலைத்த சமயங்களும் உண்டு. சமயங்கள் மனிதநேயத்தை வளர்த்து, மாந்தரை நன்னெறியில் வார்ப்பதற்கு தோன்றியவையாகும். இறை உணர்வை மக்கள் உள்ளத்தில் ஊட்டி, அதன்வாயிலாக, ஆன்மநேய ஒருமைப்பாட்டினை வளர்த்து மக்களை இணங்கி வாழச்செய்தல் என்னும் உயர்ந்த குறிக்கோள் சமயங்களுக்கு உண்டு. நன்மை பயக்கும் குறிக்கோளுடன் தோன்றிய சமயங்கள், மக்களுக்குத் தீமை பயப்பனவாக மாறிப்போன நிலையில், அவற்றின் உயர்ந்த குறிக்கோளை நிலை நாட்டுவதற்கான முயற்சிகளும் அவ்வப்போது நடைபெற்றுள்ளன. பாரதியாரின் சமய உணர்வினைப் புலப்படுத்தும் பாடல்கள் பல இடங்களில் காணப்பட்டுள்ளன. பாரதியாரின் படைப்புக்கள் அனைத்திலும் பரவிக் கிடக்கும் சமய உணர்வினை ஆய்கின்ற போது, அனைத்துவகைச் சமயங்களையும் வெறுப்பின்றித் தழுவிச் செல்கின்ற இயல்பைக் காணலாம்.

### இறைவன் ஒருவனே

ஓரிறைக் கொள்கையை பாரதியார் தமது சமயத்தின் மீது கொண்ட பற்றினால் இறைவன் ஒருவனே என்று கூறினார்.

**தெய்வம் பலபல சொல்லிப் - பகைத்**
**தீயை வளர்ப்பவர் மூடர்**
**உலக தனைத்திலும் ஒன்றாய் - எங்கும்**
**ஓர் பொரு ளானது தெய்வம்**

***(பாரதியார் கவிதைகள், பல்வகைப் பாடல்கள், பா.3)***

இறைவனைப் பாரதியார் அனைத்து மதங்களின் ஒத்த தன்மை என்று குறிப்பிடுவதனை உணரலாம்.

### பெண்ணியம்

அண்மைக் காலம்வரை, இந்திய நாட்டுப் பெண்கள் அடிமைகளாகவே இருந்துள்ளனர். பத்தொன்பதாம் நூற்றாண்டின் தொடக்கம் முதல், இந்தியாவில் ஏற்பட்ட சமுதாய விழிப்பு நிலை காரணமாகப் பெண்களுக்கு

இழைக்கப்பட்ட கொடுமைகள் அகற்றப்பட வேண்டும் என்ற எண்ணம் எழுந்தது. பொதுவுடைமைச் சமுதாயம் மலரத் தடையாக இருக்கும் காரணிகளில் ஒன்று பெண்ணடிமையாகும். சமூகச் சக்கரம் சிறப்பாக செல்வதற்கு ஆண், பெண் இருவரும் தேவையாகும். ஆயினும் பெண்ணைத் தனக்கு அடிமையென்று ஆண் கருதுவதால்தான் மானுட முரண்பாடு ஏற்படுகின்றது. பெண்ணுக்கு விடுதலை என்பது இன்றியமையாததாகும். இதைப் பாட்டுக்கொரு புலவன் பாரதி,

**பெண்ணுக்கு விடுதலை நீரில்லை யென்றால்**
**பின்னிந்த உலகினிலே வாழ்க்கை யில்லை**

***(பாரதியார் கவிதைகள், தனிப்பாடல்கள், பா.2)***

என்கிறார். இன்றைய சமூக மலர்ச்சிக்குச் சமூகத்தில் மறுபாதியான மகளிரின் முன்னேற்றத்தைப் பொறுத்துள்ளது என்பதை உணர்ந்த பாரதி,

**பெண்மை வாழ்கென்று கூத்திடு வோமடா!**
**பெண்மை வெல்கென்று கூத்திடு வோமடா**

***(பாரதியார் கவிதைகள், ஞானப்பாடல்கள், பா.2)***

என்கிறார். சமுதாயச் சீர்திருத்தவாதிகளும், கவிஞர்களும், எழுத்தாளர்களும், இந்தச் சுழ்நிலையைப் பயன்படுத்திக் கொண்டு, பெண்கள், அனைத்து வகை உரிமைகளையும் பெற்று ஆடவர்க்கு நிகராக வாழ்வதற்கான வழிகளை வகுத்துக் கொடுத்தனர் என உணரலாம். அதற்கு முன்னோடி பாரதியார் ஆவார். எதையும் தொலைநோக்கோடு பார்க்கும் பாரதி, பெண்களின் சமூக நிலையையும் பார்க்கிறார். பாரதி வாழ்ந்த காலத்தில் மேலைநாட்டுப் பெண்கள் விடுதலை பெற்றுச் சுதந்திரத்துடன் கல்வி கேள்விகளில் சிறந்திருந்ததைக் கற்றும், கேட்டும் உணர்ந்திருந்தார். அதேநேரத்தில் நம் தாய்த்திரு நாட்டில் பெண்கள் அடிமைகளாய், பேசத் துணிவற்றவர்களாய் வாழும் வாழ்க்கையைக் கண்டு,

**நாணும் அச்சமும் நாய்கட்கு வேண்டுமாம்**
**ஞான நல்லறம் வீர சுதந்திரம்**
**பேணு நற்குடிப் பெண்ணின் குணங்களாம்**
**தெய்வத்தின் பேச்சுகள் கேட்டிரோ**

***(பாரதியார் கவிதைகள், பல்வகைப் பொருட்கள், பா.4)***

என்கிறார் பாரதியார். பெண் தெய்வம் பேசவதாக அமைத்து அதன்வழி எக்காலத்தும் பெண்கள் சுதந்திரத்துடனும் வீர மங்கையராக உலா வர வேண்டும் என்றும் ஆசைப்பட்டார். பாரதியின் கனா இன்று நிறைவேறியதை காணும்போது காலத்தை வென்ற பாரதியின் சிந்தனை போற்றக்கூடியதாகும். பெண் சமூகத்தை அடிமைப்படுத்துவதையும் அவர்கள் சிறிய ஆசைகளினால் பாசத்தினால் ஆட்பட்டு அவ்வட்டத்துக்குள்ளேயே சுழன்று மடிவதையும் கண்டு மனம் வெதும்பி அதன் விளைவாக,

**வற்புறுத்திப் பெண்ணைக் காட்டிக் கொடுக்கும்**
**வழக்கத்தைத் தள்ளி மிதித்திடுவோம்**

***(பாரதியார் கவிதைகள், பல்வகைப் பாடல்கள், பா.6)***

என்று தாய்க்குலத்தின் உரிமைக்காகப் போராடியதை உணரலாம். பாரதி கண்ட கனவு இன்று நனவாகிக் கொண்டிருக்கிறது. காலத்தின் கண்ணாடியாய்ச் சமூகத்தைப் படம்பிடித்துக் காட்டும் சமூகச் சிற்பிகள் தான் கவிஞர்கள். அவர்களின் எண்ணமும் சொல்லும் இன்றில்லையாயினும் என்றாவது ஒரு நாள் நடந்தேறும் என்பது நம்பிக்கை, அக்கூற்று மெய்யானது என்பதைப் பாரதியாரின் கவிதை வரிகள் இன்று மெய்ப்பித்துள்ளன. தமிழர்களின் பொதுமறையாம் திருக்குறள் எப்படிக் காலம் கடந்தும் சாதித்துக் கொண்டிருக்கிறதோ அதைப்போல் கவியோகி பாரதியின் கவித்துவமும் என்றும் எக்காலத்திலும் அழியாமல் இருக்கும் என்பது திண்ணமாகும்.

### வருங்கால முன்னேற்றம்

பாரதி நமது சமுதாயத்தை பாழ்படுத்தி வரும் தீமைகளை எல்லாம் சற்று அணுகி, தமிழ் சமுதாயத்தில் புரையோடிக் கிடக்கும் தீமைகள் அறவே அவை அகற்றப்பட வேண்டுவதன் அவசியத்தையும், அதற்குரிய எளியமுறைகளையும் கண்டுணர்ந்தார். வருங்கால முன்னேற்றத்திற்காக பாரதி கண்ட கனவு இன்று நடந்து கொண்டுதான் இருக்கிறது. பாரதியார் ஒரு கற்பனைவாதி அல்ல, சமுதாய வளர்ச்சியினை உணர்த்த வந்த ஒரு தீர்க்கத்தரிசி ஆவார். இதனையே,

**எங்கும் சுதந்திரம் என்பதே பேச்சு - நாம்**
**எல்லோரும் சமமென்பது உறுதியாச்சு**
**சங்கு கொண்டே வெற்றி ஊதுவோமே - இதைத்**
**தரணிக்கெல் லாமெடுத்து ஓதுவோமே**
***(பாரதியார் கவிதைகள், தேசிய கீதங்கள், பா.31)***

என்ற இந்தப் பாட்டின் மூலம் வருகின்ற காலத்தை உணரலாம், இந்திய மக்கள் யாவரும் ஒரே குலம் என்பதை,

**எல்லோரும் ஓர்குலம் எல்லோரும் ஓரினம்**
**எல்லோரும் இந்திய மக்கள்**
**எல்லோரும் ஓர்நிலை எல்லோரும் ஓர்விலை**
**எல்லோரும் இந்நாட்டு மன்னர்**
***(பாரதியார் கவிதைகள், தேசிய கீதங்கள், பா.17)***

என்று பெருமிதத்தோடு நெஞ்சைநிமிர்த்துக் கூறுவார்.

### முடிவுரை

மகாகவி சுப்பிரமணிய பாரதியார் தனது பாடல்களில் சமூகம் மேன்மை பெற்றால் இவ்வுலக வாழ்க்கை சிறப்புப் பெற்று, பேதம் நீங்கி வாழலாம் எனக் குறிப்பிட்டுள்ளார்.